# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. No. 111 /2021 PW1

24.02.2026 **வா..சா.1 ருக்மணி (எ) மணியம்மாள் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. 85 செண்ட் நிலம் ஆகும். வழக்கு சொத்தின் வடக்கே ஊரும், தெற்கே கிணறு, மேற்கால் ரோடும், கிழக்கே வஜ்ரம் என்பவரின் நிலம் உள்ளது. 19.03.1983ந் தேதி எனது அப்பாவிற்கு பாகம் மூலம் கிடைக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி பாகத்தில் 1.66 ஏக்கர் எனது அப்பாவிற்கு பாகமாக வந்தது. வழக்கிற்கு ஆதாரமான ஆவணம் ஏதும் நான் கொடுக்கவில்லை. இந்த வழக்கை நான் சின்னம்மா, பூங்கொடி, அமுலு, செல்வி, ரமேஷ் ஆகியோர் மீது போட்டுள்ளேன். போளூர் உரிமையியல் நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி போளூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழியை தடுக்கக்கூடாது என வழக்கு போட்டேன். சின்னம்மா, பூங்கொடி, அமுலு ஆகியோர் மீது வழக்கு போட்டேன். 05.09.1990ல் எனது அப்பா எனது அம்மாவிற்கு உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அது பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் எனது தகப்பனரான அண்ணாமலை 31.03.2002ந் தேதி இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது அப்பா இறந்த பிறகு எனது அம்மா தான் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் மகள் நான்கு பேரும் அனுபவித்து வந்தோம். 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் 4, 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் வாரிசு தான் 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். 4 வாரிசுகளுக்கு சரிசமமாக பிரித்து எனது அம்மா ஒரு கிரைய ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அமுலு மற்றும் எனது அம்மா முனியம்மாள் ஆகியோர் அவர்களுக்கு வந்த பாகத்தை ராஜேந்திரனுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 29.02.2012ந் தேதி சின்னபையனுக்கு எனது அம்மா முனியம்மாள் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. மேலும் அதே தேதியில் செல்விக்கும், ரமேஷுக்கும் எனது அம்மா பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. **(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.